குதுபுகள் திலகம்
யாஸீன் மௌலானா
அலஃ ஹாஷிமிய் ரலி



ஆசிரியர்

ஜே.எஸ். கே.ஏ.ஏ. எச். மௌலானா

குதுபுகள் திலகம் யாஸீன்

மௌலானா அல்-ஹாஷிமிய் (ரலி)

ஆசிரியர்

ஜே.எஸ். கே.ஏ.ஏ. எச். மௌலானா

வெளியீடு

அவ்னியா பதிப்பகம்

F/4, டோர் எண். 5

வேலு தெரு,

மேற்கு மாம்பலம்

சென்னை - 600 033.

பணிந்துரை

அஹ்மதியத்தால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வல்லமை மிக்க காலத்தின் அதிபதி எம் ஆருயிர் தந்தை குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜுத் ஜமாலியா ஸய்யிது கலீல் அவ்ன் அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய் யுல் ஹா ஷிமிய் மௌலானா நாயகம் அவர்களின் தந்தை நாயகமான மெய்ஞ்ஞானச்சுடர், காலத்தின் ஒப்பற்ற நாயகர், அவதார புருஷர், குதுபுகள் திலகம் அஷ்ஷெய்கு ஜமாலிய்யா அஸ்ஸய்யித்யாஸீன் மௌானா அல்காதிரிய்யுல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்கள் திருமுல்லைவாசல் எனும் ஊரில் மறைந்தும் வாழ்ந்து வருகிறார்கள். குத்புல்அக்தாப் யாஸீன் மௌலானா நாயகம் அவர்களின் ரவ்லாஷரீபில், பெரும் திரளான பக்தர்கள் சூழநிற்க, அங்கு குத்புல்அக்தாப் நாயகம் அவர்களின் தலைமாட்டுப் பகுதியில் எமதுயிர்த் தந்தை குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜுத் ஜமாலிய்யாஸெய்யிது கலீல் அவ்ன் மௌலானா நாயகமவர்கள் நின்று எம்மை உள்ளே அழைத்துத் தங்கள் அருகில் நிற்கச்செய்து, மிகவும் அழகிய குரலிலே குத்புல்அக்தாப் யாஸீன் மௌானா நாயகம் அவர்களை வாழ்த்திப் பாமாலையை எமதுயிர் ஷைகு நாயகம், காலத்தின் அதிபதி கலீல் அவ்ன் நாயகமவர்கள் பாடி முடிக்கின்ற காட்சியை எமது கனவினிற்கண்டு, அதை எமதுயிர்த் தந்தை நாயகம் அவர்களிடம் சொன்னேன். அதனைக் கேட்டு அகமகிழ்ந்து, தங்கள் தந்தை குத்புல் அக்தாப்

நாயகம் பேரில் பாமாலையாக்க இருந்ததாகக்கூறி **குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் (ரலி)** என்ற இந்த சிறப்புமிக்க நூலை பாமாலையாகப் புனைந்து, இந்த அரும்பெரும் நூலை அச்சிலேற்றி வெளியிடும் அரும்பெரும் பாக்கியத்தினை எமக்கு நல்கிய எமதாருயிர்த் தந்தை, காலத்தின் வல்லமைமிக்க அதிபதி அஷ்ஷெய்கு ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் காதிரிய்யுல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமி நாயகம் அவர்களுக்கு எமது சிரம்தாழ்ந்த பணிவான நன்றியை உரித்தாக்குகிறேன்.

இச்சிறப்புமிக்க புனிதமான நூலை அச்சி லேற்றுமுன் கவனமான முறையில் "புரூப்ரீடிங்" செய்து இந்நூலை நேர்த்தியாக அமைக்க உதவிய எமது சங்கைக் குரிய ஷெய்குநாயகம் அவர்களின் உயிர்ப்பிள்ளையும், எமது மனைவியுமான **Prof. A.** மெஹர்பானு அவர்களுக்கும், மற்றும் இப்புனித நூலை அச்சிலேற்றி இதற்கு அழகான முறையில் அட்டைப்படம் அமைய ஆலோசனை நல்கிய சங்கைக்குரிய ஷெய்குநாயகம் அவர்களின் அன்புப்பிள்ளைகளான **J.** முகம்மது பாரூக், **Prof. Dr. M.** குலாம் முகம்மது, **Engineer P.** ஷம்சுல் ஹக் ஆகியோருக்கும் எம் ஆழிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலீபா. அட்வகேட் M. பீர்முகம்மது
உயர்நீதிமன்றம், சென்னை

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

எமதுயிர்ப் பிள்ளை வழக்குரைஞர்
எழிலார் கலீபா பீர்முஹம்மத்
தமது கனவினிற் கண்டதுபோல்
தனியொரு கவிதை தந்தைக்கு
அமுதா யமைக்க நாடினெனே
அவர்க்கே யிதனைக் கையளித்தேன்
சமுதா யத்தார் படித்திதனை
சயம்பெற வேண்டு மிறையோனே

(சமர்ப்பணம்)

ஹக்கிய் யாவெனு(ம்) நந்தரீக்கா
திக்கெல் லாம்பரந் துயர்வடைய
தக்க வினைகள் புரிந்தவராம்
தலைமை கலீபா அப்துல்கரீம்
துக்க மின்றி சுவனம்வாழ்
தூய வர்க்கிது சமர்ப்பணமே
இக்கவி யாலவர் சந்ததிகள்
இனிதே வாழ்ந்திட அருள்வாயே.

குதுபுகள் திலகம்
ஜமாலிய்யா ஸய்யித் யாஸீன்
மௌலானா அல் - ஹாஷிமிய் (ரலி)

1. இறையோனின் றிருநாமங் கொண்டு - அந்த
நிறையோனின் புகழதுவுங் கொண்டு - இந்த
நன்னூல் நிறைவெய்த
மன்னும் புகழெய்த
வாழி - நீடு - வாழி.

2. கருணையு மீடேற்றங் கொண்டு - எம்
திருநபிமேல் எப்போழ்தும் விண்டு - அவர்
கிளையார் தோழர்கள்
நிலையா யவர்மீதும்
வாழி - நீடு - வாழி

3. தேனூறுந் திருச்சரிதை யொன்று - நிறை
நானாரக் கூறுகிறே னின்று - இது
யாஸீன் நாயகத்தின்
பாசத் திருச்சரிதை
வாழி - நீடு - வாழி.

4. பாரேந்தும் பெருமானின் பேரர் - அவர்
சீரேந்தும் முஹியியுத்தீன் பேரர் - பெரும்
ஞானக் கலைமேதை
மானப் பெருந்தகையார்
வாழி - நீடு - வாழி.

5. திக்கெல்லாஞ் சாகரஞ்சூ ழீலத் - தென்
திக்குறையுந் திக்குவலை சீல - வருள்
யாஸீன் நாயகமாம்
நேசர் பிறந்தவிடம்
வாழி - நீடு - வாழி.

6. சீரிலங்கும் பக்தாதிற் பிறந்தார் - தந்தை
பேறிலங்கத் தாயாரும் பிறந்தார் - எழில்
ஈழத் திருநாட்டில்
வாழத் திருவருளாய்
வாழி - நீடு - வாழி.

7. உம்முஹபீ பாக்கண்ணே தாயார் - தந்தை
விம்முபுகழ் முஹம்ம தாவார் - ஜமா
லிய்யா மௌலானா
உய்ய மாந்தர்கதி
வாழி - நீடு - வாழி.

8. வயதுபதி னொன்றினிலே தாயு(ம்) - மறைந்
தயராத துன்பத்தி லோயா - துற
வாங்கண் தந்தையவர்
பாங்கா யழைத்தனரே
வாழி - நீடு - வாழி.

9. பாரதமாம் நாட்டிற்குச் சென்று - ஆங்கண்
சீரான அறபுக்கலை நன்று - நிதம்
பயிலக் கலையகத்தில்
சுயமாய்ச் சேர்ந்தார்கள்
வாழி - நீடு - வாழி.

10. பாரதத்தில் மேலப்பா ளையம் - எனும்
ஊரிலுறு மஸ்பிய்யா தன்னில் - அறக்
கற்றுத் தேர்ந்தார்கள்
சற்று மையமற
வாழி - நீடு - வாழி.

11. அஹ்மதலி யென்றவுயர் அறிஞர் - அவர்
நஹ்விற்புலி யென்றழைத்தார் பெரியார் - மாப்
பிள்ளை ஆலிமவர்
வெள்ளை உளத்தவராம்
வாழி - நீடு - வாழி.

12. அன்னவரே நாயகத்தின் ஆசான் - யூஸுஃப்
என்றவர்தத் துவஞான வாசான் - கற்றுக்
கொடுத்தார் செம்மையுற
படித்தார் கசடறவே
வாழி - நீடு - வாழி.

13. பளவரக்கா டென்னுமோ ரூரில் - வேறு
பலபலவாங் கலையாவுஞ் சீராய் - கற்றுத்
தேர்ந்தார் பார்புகழ
கூர்ந்தார் மதிமிகவும்
வாழி - நீடு - வாழி.

14. அறபுக்கலை கற்றறிந்தார் சீராய் - மறை
அறநெறிக ளூற்றுணர்ந்தார் வீறாய் - திருக்
குர்ஆன் ஹதீஸ் முதலாம்
அருமைக் கலைகளெலாம்
வாழி - நீடு - வாழி.

15. வயதுபதி னாறினிலே சீராய்ப் - பெரும்
பயனுள்ள அறபுக்கலை ஆராக் - கற்றுத்
தேர்ந்தார் பேறுற்றார்
ஓர்ந்தார் பயனடைந்தார்
வாழி - நீடு - வாழி.

16. சிறுவயதிற் பாவலரு மானார் - உயர்
அறபியிலே பாடல்கள் தேனார் - சுவை
மிகவே யாத்தார்கள்
இகமே புகழ்ந்திடவே
வாழி - நீடு - வாழி.

17. அறபுமொழிப் பேரறிஞ ரானார் பலப்
பிறமொழிகள் கற்றார்க ளானாக் - கலைக்
கருவூ லம்பலவும்
திருவா யாத்தார்கள்
வாழி - நீடு - வாழி.

18. வடநாடு சென்றார்க ளன்னார் - ஆங்கண்
தொடராகத் தருக்கங்கள் கற்றார் - இஸ்லா
மிய்யாக் கலையகத்தில்
எய்தார் பெரும்பட்டம்
வாழி - நீடு - வாழி.

19. தேவ்பந்க லாசாலை தன்னில் - அவர்
தூவறிவாந் தத்வார்த்த மெண்ணில் - கற்றுத்
தேர்ந்தார் தகநின்றார்
சார்ந்தார் உயர்நிலையை
வாழி - நீடு - வாழி.

20. கலைக்கூடம் தேவ்பந்திற் கற்று - பிக்ஹு"
கலையாசா னாய்ப்பதவி யேற்று-பேரா
சிரிய ரானார்கள்
அரிய வருந்தவத்தார்
வாழி - நீடு - வாழி.

21. நாவலராம் நெடுநேரம் பேசும் - உயர்
தூவலராந் தூயகருத் தோதும் - நிறை
கருத்தே பேசுமவர்
திருந்தப் பேசுபவர்
வாழி - நீடு - வாழி.

22. மக்களெலா மவர்பெருமை கூறும் - அறி
வுக்கடலாய் பொக்கசமாய்ச் சீருஞ் -சிறப்
பெய்தும் பேரறிஞர்
மெய்யி நிருப்பிடமே
வாழி - நீடு - வாழி.

23. உண்மைக்கு முரணாகாத் தன்மை - நிதம்
வன்மையை எதிர்த்தாடுந் தின்மை - உளச்
சக்தி நிறைந்தவராம்
பக்திப் பெருந்தகையாம்
வாழி - நீடு - வாழி.

24. பலநூல்கள் யாத்தார்கள் மேதை - அதில்
உளந்தேடும் அறிவுமிகு போத - னையு
முறையே நிறையவுண்டு
இறையி னருளுண்டு
வாழி - நீடு - வாழி.

25. ஞானத்தின் பொக்கசமா யிலங்கும் - உயர்
தேனமுதாய் "யவானி" என விளங்கும் - நன்
நூலைத் தந்தமகான்
சாலச் சிறந்தவராம்
வாழி - நீடு - வாழி.

26. ஈரடிப்பா முளரிய்யா தன்னை - ஐஞ்
சீரடிப்பா வாயாத்துத் தந்த - அருந்
தூதர் புகழ்பாடும்
நீதர் மௌலானா
வாழி - நீடு - வாழி.

27. சாதுலி நாயகத்தை யேத்தி - மிக
நூதனமாய் நூலொன்று யாத்து - உயர்
வெய்தார் பேறடைந்தார்
துய்த்தார் பேரின்பம்
வாழி - நீடு - வாழி.

28. ராத்திபத்துல் ஹக்கியா வென்னும் - உயர்
தோத்திரங்கள் சீருடனே பண்ண - ஓ
ரருநூல் பக்தர்களுக்
கருவா யியற்றினரே
வாழி - நீடு - வாழி.

29. இன்ஸானுல் காமிலெனும் நூற்கு - உயர்
இன்னறபி மொழியினிலே தார்க்கு - அரும்
உரையும் செய்தார்கள்
இறையோ னருளாலே
வாழி - நீடு - வாழி.

30. அருணபியின் பொன்மொழியாம் புகாரி - யதற்
கருவுரையொன் றியற்றினரே தேறி - அஃ
தறபி மொழியினிலே
அறிவோர்க் கெழுதினரே
வாழி - நீடு - வாழி.

31. அறபுமொழி கற்பவர்க்குச் சிறந்த - ஒரு
நிறைவான வகராதி தந்தார் - பெரும்
சீருஞ் சிறப்புடைத்து
பேறும் புகழுடைத்து
வாழி - நீடு - வாழி.

32. வானொலியி லுரைநிகழ்த்தி னார்கள் - அது
தேனூறு(ம்) நற்றமிழிற் சிறப்பு - நிறை
வாகச் செய்தருளி
ஏகப் புகழ்பெற்றார்
வாழி - நீடு - வாழி.

33. ஹலாலும் ஹராமுமென வொன்று - அற
பிலக்கியவ ளர்ச்சியென வொன்று - இவை
படிப்போ ரறிவுபெற
வடிவா யுரைத்தனரே
வாழி - நீடு - வாழி.

34. இறையுதயப் பாக்கள்பல அறபு - உயர்
நறைமொழியில் யாத்தார்கள் திரிபு - வழு
வில்லா விறைஞானம்
நல்லா யதிலுறையும்
வாழி - நீடு - வாழி.

35. தமிழ்மொழியிற் றனிக்கவிதை பலவும் - புக
ழமிழ்தார மாய்ப்புனைந்தார் வலிகள் - கோ
மாநபீ யின்பேரர்
ஞானக் கடலவராம்
வாழி - நீடு - வாழி.

36. யவானிஎனு மவர்கடம் நூலை - நிதம்
அவனியுளோர் அறிந்திடவே சாலச் - சீர்
தமிழில் மொழி பெயர்த்தார்
அமிழ்தா யெமக்கூட்ட
வாழி - நீடு - வாழி.

37. துயர்நீக்கும் முஹிய்யுத்தீன் ஆண்ட-வர்
உயர்நூலாம் கௌதிய்யா தன்னைச் - சீர்
தமிழில் மொழி பெயர்த்தார்
அமிழ்தா யெமக்கீந்தார்
வாழி - நீடு - வாழி.

(வேறு)

38. திருமுல்லை வாசலிலே திருமணஞ் செய்தார் - நீலப்
பெருங்கடற்சூ ழீலத்திற் பெரியோர் வாழ்ந்த
தென்கரையூர் வெலிப்பிட்டி சிற்றூர் தனிலும் - நிறை
இன்னருட்பேர்த் திருமணமு மிசைவொடு செய்தார்.

39. அவர்கட்குப் பிள்ளைக ளழகுறப் பிறந்தார்-இன்னார்
இவர்பார தத்தினிலு மீழந் தனிலுஞ்
சிறப்போடும் பேறோடுஞ் சீவிக்கின்றார் - நிதம்
அறவாழ்வு வாழ்தலன்றோ வழகோர் கடமை.

40. ஈழத்திற் புகழ்பெற்றோ ரிடையே மற்று - முயர்
சீலத்தோ ரிந்தியவர் சீரவர் மாட்டுஞ்
சாலப்பெரும் பெயருற்றார் சான்றவ ரானார் - பெரு
ஞாலத்தில் ஞானியர்கோ னாமமு பெற்றார்.

41. ஞானத்தி னுயர்நிலையி லுயர்ந்து நின்றார் - மானக்
கோனவனின் பொருத்தத்திற் கூடி நின்றார்
தேனமுதாஞ் ஞானத்தைச் சேர்த்துத் தந்தார் -
உண்மை
தானேதா னானென்று தனித்து நின்றார்.

42. ஞானத்திற் றாகங்கொண்டோர் ஞால மெல்லாம் - நிதம்
தேனமுதைத் தேடிவரும் தேனீ யென்ன
மௌலானா நாயகத்தை வந்து தேடிப் - பெரும்
கௌரவமும் பெற்றார்கள் கருணையாலே.

43. நல்லாராய் வாழ்வதற்கு ஞானந் தேவை - உயர்
நல்லவனை யடைவதற்குஞ் ஞானந் தேவை
நல்வணக்கஞ் செய்வதற்குஞ் ஞானந் தேவை - அந்
நல்லுலகிற் பேறுறவுஞ் ஞானந் தேவை.

44. தன்னையே தானறியின் தனித்து நிற்பார் - விண்
மண்ணீராம் பூதமெலாம் வணங்க நிற்பார்
அன்னவரே யுகத்தினிலு மரியவ ராவார் - அந்
நன்னெறியி னின்றவரே நாயக மாவார்.

45. நாயகத்தி னல்வழியி னடந்தவ ரெல்லாங் - கடுந்
தீயகத்தை நீக்கியவர் சீர்வலி மார்கள்
காயத்தைக் கடுகளவுங் கருதா நின்றார் - கொடு
மாயத்தைச் சிறிதளவு மதியா நின்றார்.

46. மன்திகெனுந் தருக்கவியல் மாசறக் கற்றார் - அவர்
முன்னிலையிற் றருக்கிக்க முடிந்தவ ரில்லர்
சொல்வளத்தி லறபியிலே சொன்னிக ரில்லார் - உயர்
நல்விளக்கந் தருவதிலுந் நனிசிறப் புற்றார்.

47. அறபியிலே கவிதைக ளணிபெறப் புனைந்தார் - பெரும்
அறபிகளும் கண்டவுடன் அதிசயப் பட்டார்
தமிழ்மொழியிற் கவிதைகள் தரமுடன் யாத்தார் - அதை
அமிழ்தெனவே பாடிப்பலர் ஆர்வமுங் கொண்டார்.

48. பன்மொழிகள் கற்றுணர்ந்த பன்மொழிப் புலவர் - அவர்
நன் மொழியா முர்தினிலும் நன்குரை யாடும்
தன்மையுடை யாரதிலுஞ் சாலச் சிறந்த - கவி
இன்னயமாய்ப் புனைவதிலு மியைபுடை யாரே.

49. குத்துச் சண்டை பயின்றார்கள் குறையற வேதாம் - மல்
யுத்தவீர ராகவும்பேர் யுகந்தனிற் பெற்றார்
வித்தையோடு சித்துகளை நித்தமும் வெறுத்தார் - அருள்
நித்தியனின் நினைவதிலே நிச்சலு(ம்) நிலைத்தார்.

50. அறபுமொழி தாய்மொழிபோ ழகுற மொழிவார் - அதை
அறபிகளுங் கேட்டவுட னதிசயப் படுவர்
அறவேநாங் கேட்டதிலை அவ்வண(ம்) மொழிவார் - ஈங்கும்
பிறரெவரைக் கண்டதிலை பெருமை யிதென்பார்.

(வேறு)

51. மக்காமா நகர்சென்று
மறையோனின் கஃபாவை
தக்கமுறை வலம்வந்தார்
தௌஹீதின் மாண்பதனால்

52. உண்மையை யறியாதார்
உத்தமனை யுணராதார்
மண்கல்லி னாற்சுவரை
வலம்வருதற் கருத்தாமோ.

53. சிலைவணக்கஞ் செய்வதுபோற்
சீர்முறைக ளறியாதார்
நிலையான கஃபாவை
நித்தமுமே வணங்குவரே.

54. தாற்பரிய மறியாது
தனித்தவனை வணங்குவதால்
மேற்கண்ட வினையல்லால்
வேறேதுங் காண்பதிலை.

55. துக்கஞ்சாற் செய்தியொன்று
சொல்கின்றேன் கேட்டிடுவீர்
மக்கத்துக் க.்.பாவுள்
மறையவனை யடக்கினராம்,

56. என்றனனே ஹஜ்செய்த
இழிவான மூடனவன்
என்றுமிது சாத்தியமோ
எங்குமுளாற் கொவ்விடுமோ.

57. புத்தபெரு மானவரின்
புனிதநிறை பாதமது
சுத்தமுறப் பதிந்தவொரு
சுவடொன்று க.்.பாவுள்,

58. உள்ளதென வெலிகமத்தில்
உறைந்தவொரு முழுமூடன்
கள்ளமுட னாளிதழில்
கறைபடவே யெழுதினனே.

59. முறையறியா வித்தகையோர்
முடித்துவரும் ஹஜ்ஜெல்லாம்
நிறைவாமோ எரிநரகில்
நிச்சயமே வீழ்ந்திடுமால்

(வேறு)

60. அவைநடுவ ணறிஞர்தம் மத்தி யிலே
அண்டத்துத் தாரகாக ணத்தி னிடையே
அவைமின்ன நடுமுத்தாய் விளங்கு மதிபோல்
அறிஞர்கோன் மௌலானா தோன்றி நின்றார்.

61. மக்காவில் செய்குல்அரப் என்ற பெயர்
மக்கத்தார் யாஸீன்மௌ லானா வுக்கு
தக்கதொரு நாமமெனச் சூட்டி நின்றார்
தகைமையவர்க் கிருந்தனாற் றானே யென்க.

62. எங்கண்சென் றுற்றாலு மாங்கண் பேறாம்
சங்கையோ டுயர்வோடு தலைமைத் துவமும்
தங்கட்குக் கிடைத்ததெலாந் தனியோன் பெருமை
மங்காப்பு கழ்பெற்றோர் மாள்வ தில்லை.

(வேறு)

63. சங்கையாங் கராமத்கள்
தமக்குற்ற தொன்றல்ல
எங்கெங்கும் பிரபலமாய்
இயன்றவைகள் பலவுண்டு.

64\. தம்வயது பதினொன்றில்
தனித்திந்தி யாசென்று
சம்பையெனு மூரதனில்
தாம்வாழ்ந்து வருங்காலை,

65\. சிறியார்க ளொடுகூடித்
தினமுமே நீர்நிலைக்குக்
குறுகியவண் பிடித்தெறிந்த
சிறுமீன்கள் காய்ந்தவற்றை,

66\. அருகிருந்தோர் வீசிடவே
அவையாவும் மிதந்தனவே
திருஞானி மௌலானா
திருக்கரத்தாற் காய்ந்தவற்றை,

67\. தினந்தினமு மெறிந்திடவே
சிறுமீன்க ளுயிர்பெற்றுக்
கணங்கணமா யோடினவே
கருத்தாவின் றிருவருளால்

68\. ஆச்சரியப் பட்டவர்கள்
அரியவிதைத் தந்தையிடம்
பேச்சுக்காய்க் கூறியக்கால்
பெருங்கோபங் கொண்டார்கள்.

69. தம்மகவை யழைத்தினிமேற்
றாஞ்செய்யு மிச்செயலை
எம்முறையுஞ் செய்யற்க
வென்றுபணித் தனுப்பினரே.

70. அன்றுமச் சிறுவருடன்
அறியாத வப்பிள்ளை
சென்றந்த நீர்நிலையில்
செத்தமீன் குஞ்சுகளை,

71. எறிந்ததுமே யுயிர்பெற்று
யெங்கணுமே யோடுவதை
அறிந்தவுடன் தந்தையவர்
அவ்விடத்தே சென்றுமகன்,

72. தனைப்பிடித்து நீர்நிலையில்
தள்ளிவிட்டார் சீற்றமுடன்
புனைபோலு மிதந்தவரை
புரையில்லா வொருமனிதர்,

73. இப்பிள்ளை யாழ்ந்திடுமோ
எனவஞ்சிப் பாய்ந்தவரைத்
தப்பாது பிடித்துக்கரை
தனிற்சேர்த்துத் தந்தையரை,

74. ஏனோவிவ் வாறுசெய்தீர்
இப்பிள்ளை யாழ்ந்திடுமே
யானேயெ டுத்திலெனேல்
யாதாமென் றாரவர்தாம்.

75. இப்பிள்ளை யமிழாது
என்பதனை யானறிவேன்
எப்படியு(ம்) நீயறியாய்
என்றார்கள் தந்தையரே.

(வேறு)

76. அன்றையில் முஸ்லிம்கள் வாழ்ந்த
அரியநல் லூர்களிலே சீர்த்த
நன்கொழுகும் விதிமுறைகள் யாவும்
நன்றாக விருந்ததிலை யாங்கும்.

77. பள்ளிக ளுண்டுதொழச் செல்வர்
பார்ப்பதற்கோ சமுதாயப் பற்றும்
விள்ளுதற்கோ வொற்றுமையு(ம்) மற்றும்
வேறெந்த முன்னேற்றங் கண்டதுமில்லை.

78. ஐயகோ இம்மக்க ளேனோ
அமைவின்றி வாழ்கின்றார் வீணே
மையல்கொ ளிவ்வாழ்விற் சீர்மை
மலர்வித்த லவசியமு மாமே.

79. என்றெல்லா மெண்ணியிப் பெரியார்
இனியதா(ம்) முஸ்லிம்சமு தாயம்
ஒன்றினை யமைத்திடல் தாமே
உத்தம மாமென்றே ஆங்கண்,

80. பற்பாலுஞ் சென்றாங்க ணிஸ்லாம்
பகருந்நன் வேதமொழி விளக்கி
பற்றுடனே சமுதாயக் கட்டுப்
பாடும்விதி முறைபலவும் கூறி,

81. வழிவகுத்தின் னின்னசெய்க வென்ன
வழிமுறைகள் பலகூறி னார்கள்
இழிவின்றித் தொழிற்பட்டு வருங்கால்
இருவர்தாஞ் செய்தவினைக் கேடால்,

82. அறிவித்தா ரிச்செயலை முதல்வர்
பெரியாரா(ம்) மௌலானா தமக்கு
நெறிதவறிச் செய்தவரைப் பார்த்து
நேர்படுத்தச் சென்றார்க ளாங்கண்.

83. இருவரையு மழைத்தார்கள் வினவ
இல்லத்தி லிருந்தவண்ண மவர்கள்
இருவருமே யில்லையெனக் கூற
உரைத்தார்கட் சென்றவர்கண் மாட்டே

84. இல்லையில்லை யிருவருமே யாங்கண்
இல்லத்தி லுள்ளார்கட் சென்று
நல்லதீ தில்லையெனக் கூறி
நயமாக வருமாறு கூறும்.

85. என்றவுடன் சென்றவருங் கூறச்
சென்றார்கட் பேருந்தி லேறிச்
சென்றுவிட்டோ மென்றேநீர் கூறும்
என்றுரைத்துச் சென்றார்கள் வீணே

(வேறு)

86. பேருந்தி லிருவருமே சென்றுவிட்டார்
பெரியாரே யென்றவருங் கூறிடவே
ஊருக்கவ் விருவருமே திரும்ப மாட்டார்
உத்தமனுக் கஞ்சாத பாபிகளாம்.

87. என்றார்கள் மௌலானா கோபத்தோடு
இருவருமே யுயிருடனே திரும்பவில்லை
அன்றேதாம் வந்தவைகட் கட்டைகளாம்
அருஞ்சொல்லி னாற்றலதை யறிந்திடுவீரே

(மாதம்பை)

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

88. மாதம்பை யென்னு மூரில்
 வழியினிற் சென்ற போது
நீதத்தி னின்ற மனிதர்
 நீங்களா ரெங்கு வந்தீர்
ரேதுங்க ளூரென் றாரே
 எம்மூர் தெற்கி லுள்ள
ஓதஞ்சூழ் வெலிக மந்தான்
 உணர்வீ ரென்று சொன்னோம்.

89. அவ்வூரி லறிஞ ரொருவர்
 அறநெறி நடந்த வர்கள்
மவ்லானா ஸய்யித் யாஸீன்
 மற்றும வர்க டம்மை
அவ்வாறே யாயி னீங்கள்
 அறிவீரோ வென்ற போது
எவ்வெர்க் குந்த லைவர்
 எந்தையென் றோதி னோமே.

90 ஆகா நன்று நன்று

அவர்களின் கராமத் தொன்று

வாகா யெடுத்து ரைப்பேன்

மதிப்புடன் கேட்பீ ரென்றார்

நாகாக் காத மைத்து

னனுநா னுமூர்த்த லைவ

ராகவே லையும் பார்த்தோம்

அவ்வினை கூறு வேனே.

91. வினையினை மாசு றுத்தி

வீண்விரை யங்கள் செய்தார்

நினையார் மைத்து னர்தாம்

நீசவிவ் வினை தனையே

தனையறி நாய கம்பால்

தனியே யெடுத்து ரைத்தேன்

அனையவர் வந்து கேட்க

அரும்பொயுங் கூறினாரே

92. சொன்ன பொய் கேட்டு ஞான
சூரியர் பிடரி யாலே
உன்னா வருமென் றார்கள்
அன்னணம் பிடரி வீங்கப்
பன்னவு(ம்) நாவெ ழாது
படுக்கையி லிறப்பி லாதும்
இன்னலுங் கொடுமை யாக
என்னைய ழைத்தா ரன்றே.

93. சென்றுயான் பார்த்த போது
செயலறி யாதி ருந்தார்
அன்று செய் பாப மெல்லாம்
அக்கணம் பொறுக்கச் சொன்னார்
இன்றுயான் பொறுத்து விட்டே
னென்றலு முயிர் பிரிந்தார்
என்றுமே யஞ்சு தற்கி.ʼ.
தொன்றுமே போது மாமே.

(கன்னத் தோட்டை)

(வேறு)

94. கன்னத் தோட்டை யென்னு மூரிற்
கன்னிய யாஸீன் நாயகம்
அன்ன வர்கள் சென்று பள்ளி
யறையிற் றங்கி யிருந்தனர்
துன்ன விருளும் வந்த போது
தூய வர்தாந் தூங்கினர்
உன்ன நல்ல செயல தொன்று
உணர்த்து கின்றேன் கேட்கவே.

95. தொட்டி தன்னி னீர சைந்த
தொனியுங் கேட்ட போதினில்
கட்டி லிருந்து காலை யென்னக்
கருதி வெளியில் வந்ததும்
திட்டி முன்னில் வுழூவெ டுத்த
சீர்த்த மனிதர் பள்ளியுள்
எட்டிச் சென்று தொழுது மறைய
இவரைக் காண வில்லையே

96. என்ன விஃதோ ரற்பு தந்தா
னென்னக் கருதி யறைதனிற்
சென்று பார்த்த போது வேளை
செறிந்த விரவு நேரமே
அன்ன வர்தாம் யாரோ வென்ன
அறிய வெண்ணி வுறங்கினர்
நன்று பெயரை நனவிற் போல
நன்கு ரைத்தா ருண்மையே.

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

97. கண்டவிச் சொப்ப னத்தில்
கவிதையு மவர்த மீது
தொண்டெனத் தொடர்ந்த காலை
தூக்கம் விழித்தெ ழுந்து
விண்டவச் சுவரின் மீது
விளங்கிட வெழுதி னார்கள்
கொண்டதை முழுமை யாக்கிக்
குறைவற முடித்து ளாரே.

98. காலை யெழுந்த போது
காணவே பக்தர் வந்த
காலையிற் கனவு கூறி
காட்டியவ் விடத்தி னுக்கு
மலைதலு மின்றி யேகி
மறைந்தவப் பெயரும் பார்த்து
நிலைக்க(ல்)லை யழகு றுத்தி
நிறைவுடன் திரும்பி னாரே.

(வேறு)

99. ஈழத் தரசிற் பெரியோரும்
இனிய கலைபல கற்றோரும்
சூழ விருந்த மாந்தரெலாம்
தூதர் நபியின் பேரர்க்கு
தாழப் பணிந்தே புகழ்ந்தேத்தி
தனிநிக ரற்றவ ரெனப் போற்றித்
தோழமை கொண்டோர் பலப்பலரே
தூயோ னீந்த பேறதுவே.

100. மதபோ தனைகட் பலசெய்தார்
மறைவழி நடக்கத் துணைநின்றார்
துதிகொ ணபிக ளார்மொழிகள்
துணிவுட னேற்க வழிசெய்தார்
கதியாய் நின்றே சமூகத்திற்
கரும்பணி யாற்றிச் சீருறுத்தி
வதியுந் நல்வழி வகுத்தாரே
மதிகொ ளெந்தம் பெரியாரே.

101. இரத்தின புரியெனு மூரினிலே
இனிதாய்ப் பள்ளி யமைத்திடற்கு
கரங்கொடுத் தார்க ளவ்வணமே
கணக்கில் லாப்பல பள்ளிகளும்
தரத்தின வாயுரு வாக்கிடவே
சதமு முதவி புரிந்தார்கள்
வரங்கொடுத் துதவும் பெரியாராம்
மௌலா னாவாம் சற்குருவே.

102. அனைவர் தமக்கு மறிவூட்டி
அழகிய தத்துவ ஞானமெலாந்
தனையறிந் துலகில் வாழ்தற்குத்
தகையுடன் விளக்கிய ஞானகுரு
வினைபோற் றிடுவோம் நாளுமெலாம்
இணையது நீத்து வாழ்ந்தவர்கள்
மனைவாழ் விற்றான் முக்திதனை
மகிழ்வாய்க் கண்டா ரன்னாரே.

103. எந்தம் நபிக ணாயகத்தின்
எழிலார் குதுபு நாயகத்தின்
சிந்தனை யேற்ற மௌலானா
ஸெய்யிது யாஸீன் பேரரவர்
தந்தயை நாடு கின்றோமே
தந்தருள் வாய்நீ அல்லாவே
குந்தகம் விளைக்குங் கொடியோரை
குறைத்தே யொழிப்பா யல்லாவே

104. அவர்தம் பொருட்டா லெமக்குவரும்
அழிவோ டிழிவு துன்பமெலா
மிவருங் கொடிய சூழ்நிலையை
இன்றே போக்கி விட்டிடவே
எவர்க்கு மிறையா முன்னையே
என்றும் வழுத்தி வேண்டுவமே
சுவர்க்கந் தந்தருட் சான்றோர்க்கு
சுகமுந் தந்தரு ளல்லாவே.

105. கொடிய சூழ்நிலை முதலான
கொலைகட் சூது வஞ்சகங்கள்
அடியோ டழிந்து நிம்மதியாய்
அழகாய் வாழ வருள்புரிவாய்
அடியே மும்மை வணங்குகிறோம்
அவைகுறை நீத்து மன்னித்துத்
திடமாய் வாழ வருள்புரிவாய்
தீதது போக்கு மிறையோனே.

106. உண்மைக் கெதிராய் வாழ்ந்துவரும்
உத்தம நபியைத் தூற்றிவரும்
கண்ணிய விஸ்லா(ம்) மதந்தன்னை
கலைத்து மாற்றிக் கறைபடுத்தும்
எண்ணிய பாபக் கிரியை யெலாம்
என்றுஞ் செய்து பணஞ்சேர்க்கும்
திண்ணி வஹாபிக் காபிர்களை
சிதைத்தே யழிப்பா யிறையோனே.

107. முஸ்லிம் பெயர்கள் வைத்துயர்ந்து
முஸ்லிம் கள்போ லுடையுடுத்து
இஸ்லா மியர்போ னடித்தேய்த்து
எஹுூதி நஸாரா மார்க்கத்தை
இஸ்லா மியரிடைப் பரப்பிவரும்
இந்த வஹாபிக் காபிர்களை
அஸ்லெனும் வேருட னழித்திடுவாய்
அனைத்து மறிந்த இறையோனே.

108\. என்குரு வென்னா சானான

எந்தை தம்மை கலீலவுனும்

நன்றே பாடினெ னிதனையே

நலமே யிருக்க வருள்வீரே

என்றுந் தங்கள் குடும்பத்தார்

எனதுயிர் முரீத்கள் யாவர்க்கும்

வன்குறை நீங்க வருள்புரிவீர்

வலிமார் கோனே பேரருளே.

(முற்றும்).

நூல் விபரம்

நூலின் பெயர்	:	குதுபுகள் திலகம் யாஸீன் மௌலானா அல்ஹாஷிமிய் (ரலி)
ஆசிரியர்	:	குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அவ்ன் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகமவர்கள்.
பதிப்பு உரிமை	:	ஆசிரியருக்கே
முதல் பதிப்பு	:	2008
ஹதியா	:	ரூ. 50/- ::